©
தமிழ்நாடு அரசு
2008

கையெழுத்துத் தொடர்

# நிதி (ஓய்வூதியம்)த் துறை

## அரசாணை எண்.188, நாள் மே 9, 2008

*(சித்திரை 27, திருவள்ளுவர் ஆண்டு 2039)*

**ஓய்வூதியம்** – தமிழ்நாடு ஓய்வூதியர் நல நிதித் திட்டம், 1995 – ஓய்வூதியதாரர் மாதப்பிடித்தம் உயர்த்தியும் மற்றும் மருத்துவ செலவினத்தின் உச்சவரம்பை உயர்த்தியும் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும் :–

1. அரசாணை (நிலை) எண்.562, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 11.7.1995.
2. அரசாணை (நிலை) எண்.404, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 9.10.2001.

––––––

**ஆணை:**

படிக்கப்பட்ட ஒன்றில் கண்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்புச் சிகிச்சை / அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும் திட்டம், 1.7.1995 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியர் மேற்கொள்ளும் சிறப்புச் சிகிச்சை / அறுவைச் சிகிச்சைக்கான மொத்த மருத்துவச் செலவினத்தில் 75 சதவீதமோ அல்லது ரூபாய் 50,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் படிக்கப்பட்ட இரண்டில் கண்ட ஆணையின்படி இத்திட்டத்திற்கு ஓய்வூதிதாரர்களிடமிருந்து மாதந்தோறும் தற்பொழுது ரூபாய் 10/– பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

2. 2008–2009–க்கான நிதிநிலை அறிக்கையில் பத்தி 158 உட்பிரிவு 3–ல் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது. "மருத்துவச் செலவுகள் உயர்ந்துள்ள இன்றைய சூழலில், மருத்துவச் செலவினத்தை மீளப் பெறுவதற்கான உச்ச வரம்பான ரூபாய் ஐம்பதாயிரம் மிகக் குறைவாக உள்ளது என பல்வேறு ஓய்வூதியதாரர்கள் சங்கங்களும் சுட்டிக் காட்டியுள்ளன. வயதான காலத்தில் ஓய்வூதியர்கள் பெறும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு உரிய தொகையை மீளப் பெறும் வகையில், மாதந்தோறும் ரூபாய் 50/– பிடித்தம் செய்து மேற்கொண்ட மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75 சதவீதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்சவரம்பு, 75 சதவீதம் அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி வழங்கப்படும்".

3. அரசு, மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாடு ஓய்வூதியர் நல நிதித் திட்டத்திற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதப்பிடித்தமாக பிடித்தம் செய்யப்படும் ரூ.10/–ஐ 1.4.2008 முதல் ரூ.50/– ஆக உயர்த்தியும் மற்றும் மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75 சதவீதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்சவரம்பை, 75 சதவீதம் அல்லது

ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி, இதில் குறைவான தொகை எதுவோ அத்தொகை வழங்க முடிவு செய்து, அவ்வண்ணமே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3—ல் உயர்த்தப்பட்ட உச்சவரம்பு மருத்துவச் செலவுத் தொகை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட வேண்டும்.

(i) இவ்வாணையில் உள்ள உச்சவரம்புத் தொகை ரூபாய் ஒரு இலட்சம், 1.4.2008—க்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைக்குத்தான் பொருந்தும்.

(ii) 1.4.2008—க்கு முன்னர் மருத்துவச் சிகிச்சை பெற்று ஏற்கெனவே மருத்துவச் செலவில் 75 சதவீதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் மீளப்பெற்றிருந்தால் அவர்களுக்கு 1.4.2008—க்குப் பின்னர், மேற்கொள்ளப்படும் மருத்துவச் சிகிச்சைக்கு 75 சதவீதம் அல்லது ஏற்கெனவே மீளப்பெற்ற தொகை போக உச்சவரம்புத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்குட்பட்டும், மிகாமலும் மீதத்தொகை வழங்கப்பட வேண்டும்.

(iii) 1.4.2008—க்கு முன்னர் மருத்துவச் சிகிச்சை / அறுவைச்சிகிச்சை மேற்கொண்டு 1.4.2008—க்குப் பின்னர் மருத்துவச் சிகிச்சைக்குண்டான மீளப்பெறும் தொகைக்கு மனு அளித்தால், அவ்வினங்களில் சிகிச்சை / அறுவைச்சிகிச்சை மேற்கொண்ட நாளில் செயலாக்கத்தில் உள்ள ஆணைப்படிதான் மீளப்பெறும் தொகை அளிக்கப்பட வேண்டும்.

5. இந்த ஆணை 1.4.2008 முதல் செயலாக்கத்திற்கு வருகிறது.

6. மற்ற நிபந்தனைகளைப் பொறுத்த வரையில் எந்த மாற்றமும் இல்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்**
அரசுச் செயலாளர்

பெறுநர்:
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை—600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை—600 032.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை),
சென்னை— 600 018. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை),
சென்னை—600 018.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை—600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை—600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை—600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை—600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை—600 002.

கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–600 015.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் /
முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி
/ சேலம் / திருநெல்வேலி.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலகங்கள்
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்,
உரிய மருத்துவமனைகளின் நிர்வாக அலுவலர்கள்.
மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை–600 010.
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை, 359, அண்ணாசாலை, சென்னை–600 006.

நகல் பெறுநர்:
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து பொதுத்துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம்,
சென்னை – 600 006 மூலமாக.
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் –
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை – 600 006 மூலமாக.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்,
மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு,
மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை,
நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு,
எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை–600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர்,
சென்னை–600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம்,
எண் 38–பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண் 158, பெல்ஸ் சாலை, சென்னை–600 005.
தலைவர், தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கம், எண். 59, இராதாநகர், குரோம்பேட்டை,
சென்னை–600 044.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்